# ප්‍රජාතාන්ත්‍රික අරගලයන් සඳහා ස්ත්‍රීන්
## ஜனநாயக போராட்டங்களுக்கான பெண்கள்
# Women for Democratic Struggles

ஊடகவியலாளர் சந்திப்பு: 2 ஆகஸ்ட் 2022

1. நாம் இலங்கையில் ஜனநாயகம், நீதி மற்றும் சமத்துவத்திற்காக இயங்கும் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்களின் குழு. நாம் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து இன, மத வேறுபாடுகளைக் கடந்து ஒன்றிணைந்துள்ளோம். '88, '89 ஆண்டுகளின் கிளர்ச்சியின் போதும், போரின் போதும் ஈஸ்டர் குண்டுவெடிப்பின் போதும் இலங்கை அரசின் அடக்குமுறை நடைமுறைகளை சவால் செய்யும் நீண்ட வரலாறுகள் நம்மில் பலருக்கு உண்டு.

2. தற்போதைய அரசாங்கத்தின் அவசரநிலைப் பிரகடனத்தையும், போராட்டக்காரர்களை போதைக்கு அடிமையானவர்கள், பாசிசவாதிகள், பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என முத்திரை குத்தி அடக்குமுறை செய்வதையும் நாங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி கண்டிக்கிறோம். போராட்டக்காரர்களை வேட்டையாடுவதையும் தன்னிச்சையாக கைது செய்வதையும் நிறுத்துமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம். அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சிப்பதற்கும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கும் தங்கள் உரிமையைப் பயன்படுத்துகின்ற எதிர்ப்பாளர்களைக் கைது செய்வதற்கும் அச்சுறுத்துவதற்கும் வெறுப்புப் பேச்சு தொடர்பான சட்டத்தைப் பயன்படுத்துவதை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

3. இந்த அடக்குமுறை உத்திகள் நிச்சயமாக புதியவை அல்ல. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் ஜனநாயக மற்றும் அமைதியான போராட்டங்களை அடக்கியதில் இலங்கை அரசு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்கள் நீண்டகாலமாக அரசின் அடக்குமுறை எதிர்ப்பை அனுபவித்து வருகின்றனர். உதாரணமாக, உண்மை மற்றும் நீதிக்காக அவர்கள் நடத்திய போராட்டத்தின் காரணமாக காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

4. ஈஸ்டர் குண்டுவெடிப்புகளுக்குப் பின், இதே அரசாங்கம் நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்களை தீவிரவாதிகளாக சித்தரித்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்னிச்சையாக கைது செய்துள்ளது.

5. அரகலய எதிர்ப்புக்கள் இலங்கை சமூகத்தின் பரந்த குறுக்கு பிரிவின் ஆதரவைப் பெற்றுள்ளது. இந்தப் போராட்டத்தில் பெண்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இது அரசாங்கத்தால் திணிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு எதிராக அணிதிரண்ட குடிமக்களின் இயக்கம்.

6. அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை, எதிர்ப்பு மற்றும் கருத்து வேறுபாடு ஆகியவை ஜனநாயகத்திற்கு முக்கியமானவை. இந்த அடிப்படை உரிமைகள் மீதான அடக்குமுறைக்கு சவால் விடும் வகையில் நெறிமுறை

56/1, Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka.
WomenforDS@protonmail.com>

மற்றும் மத வேறுபாடுகளுக்கு அப்பால் ஒற்றுமையுடன் பணியாற்ற நாங்கள் உறுதியாகவுள்ளோம்.

7. சட்டத்தின் முன் சமத்துவத்தையும் நிலைநிறுத்துமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மே 9ம், 2022 அன்று அமைதிப் போராட்டக்காரர்கள் மற்றும் அவர்களது கூடாரங்கள் மீது தாக்குதல் நடத்தியதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அந்த குற்றவாளிகளை கைது செய்வதற்கான போதுமான வீடியோ ஆதாரம் உள்ளது.

8. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், மற்றும் மக்கள் பேரவையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஜனநாயக ரீதியில் முடிவெடுப்பதில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட மக்களின் அதிக ஈடுபாடு உள்ளிட்ட அமைப்பு ரீதியான/கட்டுமான மாற்றங்களுக்கான அரகலயவின் அழைப்புக்கு செவிசாய்க்குமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மேலும், பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு கூறி மக்களிடம் புதிய ஆணையைப் பெற வேண்டும் என்றும் நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

56/1, Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka.
WomenforDS@protonmail.com>